பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 01 வியாழக்கிழமை (14-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 168

## ராஜீவ் கொலை விசாரணை:

# இந்தியாவுடன் ஒத்துழைக்க இலங்கைத் தரப்பு தயாராம்!

### மத்திய அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, மே 14

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை தொடர்பாக இந்தியாவுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க இலங்கை தயாராக இருக்கிறது; முழு ஒத்துழைப்பு வழங்கியும் வருகிறது.

இந்திய உள்துறை இணை அமைச்சர் எம்.எம். ஜேக்கப் இவ்வாறு இந்திய நாடாளுமன்றத்திலும் மாநிலங்கள் அவையிலும் நேற்று அறிவித்தார்.

மாநிலங்கள் அவையில் [ராஜ்ய சபையில்] உரையாற்றுகையில் அவர் கூறியதாவது:—

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான விசாரணைகள் இன்னமும் நடைபெற்று வருகின்றன. அது தொடர்பான அறிக்கை விரைவில் சபையில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த வழக்கில் முக்கிய எதிரிகளில் ஒருவராக விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் இனம் காணப்பட்டுள்ளார்.

ராஜீவ் கொலை தொடர்பான சிறப்பு விசாரணை குழுவுடன் இலங்கை அதிகாரிகள் இதுவரையில் முழு அளவில் ஒத்துழைத்து வந்துள்ளனர்— என்றார்.

நேற்று நாடாளுமன்றிலும் அவர் உரையாற்றினார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனையும், பொட்டம்மானையும் இந்தியாவுக்குக் கொண்டு வரும் விடயத்தில் இலங்கை அரசு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



இதற்கு காரணம் யார் என்பதை சனம் மறந்து போயிருக்கும் என்ற நினைப்புப் போல!

### மீட்புநிதி கடன் மீளளிப்பு சனி, ஞாயிறு கிழமைகளில்

யாழ்ப்பாணம், மே 14

மீட்புநிதி கடன் பத்திரதாரர்களில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கான கடன் மீளளிப்பு நாளை மறுதினம் சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இடம் பெறும்.

**சனிக்கிழமை**

மானிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை, காரைநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு— பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி— நாளை மறுதினம் காலை 9 மணிக்கு.

நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், உடுவில், வேலணை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு— மங்கையர்க்கரசி மகா வித்தியாலயம் (நல்லூர்)— நாளை மறுதினம் பிற்பகல் 2 மணி.

**ஞாயிற்றுக்கிழமை**

கரவெட்டி, பருத்தித்துறை, வடமராட்சி கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு— வட இந்து மகளிர் கல்லூரி (பருத்தித்துறை)— எதிர்வரும் ஞாயிறு காலை 9 மணி.

சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு— சாவகச்சேரி இந்துக் கல்லூரி (சங்கத்தானை)— ஞாயிறு பிற்பகல் 3 மணி. (ஓ)

### ★வாழைச்சேனையில் கடத்தப்பட்ட 12 தமிழரும் கொலை செய்யப்பட்டனர்?

மட்டக்களப்பு, மே 14

வாழைச்சேனை காகித ஆலை சுற்றாடலில் கடந்த மாதம் 29 ஆம் திகதியன்று கடத்திச் செல்லப்பட்ட 12 தமிழரும் கொலை செய்யப் பட்டிருக்கலாம் என தற்போது நம்பப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விறகு பொறுக்கச் சென்ற 13 தமிழர் கடத்தப்பட்டதும்-அவர்களில் ஒரு சிறுவன் தப்பி வந்து கடத்தல் சம்பவம் பற்றி உறவினர்களுக்குத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கண்ணி வெடியில் படையினர் பலி

யாழ்ப்பாணம், மே 14

புல்மோட்டைப் பகுதியில் உள்ள 15 ஆம் கட்டை என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் வைத்த எறிகணையுடன் கூடிய கண்ணி வெடியில் சிக்கி இராணுவத்தினர் பலர் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் கடந்த 7 ஆம் திகதி இடம் பெற்றது;

காவலில் நின்ற படையினரே கண்ணியில் சிக்கி உயிரிழந்தனர் என்று கூறப்பட்டது. (இ-5)

## மருதங்கேணியில் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சு!

### இருவர் படுகாயம்; இரு வீடுகள் சேதம்

தாளையடி மே, 14

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

குண்டு வீச்சில் இருவர் படுகாயமடைந்தனர். இரண்டு வீடுகளும் சேதமடைந்தன.

மருதங்கேணியைச் சேர்ந்த திரவியம் இராஜேஸ்வரி [40 வயது], கீரிமலை, வலித்தூண்டலில் இருந்து இடம்பெயர்ந்தவரான அந்தோனி வெனிஸ் கருணாரட்ணம் [24 வயது] ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய குண்டு வீச்சில் மருதங்கேணி ஆஸ்பத்திரி, மற்றும் விடுதிகள் என்பன சேதமுற்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் அப்பகுதியில் சீ-பிளேன் ஒன்று பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டதாக ஊர்வாசிகள் தெரிவித்தனர். [ஓ-144-15]

### தமது எம்.பியை தெரியாது மக்கள் கஷ்டப்படுகின்றனர்

#### ஜே.ஆர். கூறுகிறார் இப்படி

கொழும்பு, மே 14

நாடாளுமன்றத்துக்கு எம்.பிக்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்படுகின்றார்கள். இதனால் தமது பகுதி எம்.பி. யார் என்பது தெரியாது மக்கள் கஷ்டப்படுகின்றனர்.

சிலர் தம்மைச் சந்தித்து இவ்வாறு முறைப்பாடு செய்திருப்பதாக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

கொழும்பில் லயன்ஸ் கழக வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்திலேயே தொகுதி ரீதியாக எம்.பிக்களைத் தெரிவு செய்யும் முறை ஒழிக்கப்பட்டு, புதிய அரசமைப்பின் கீழ் விகிதாசார பிரதிநிதித்துவ முறை அமுல் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### செட்டிகுளத்தில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 14

செட்டிகுளம் பகுதியில் உள்ள படையினர் நேற்று முன்தினம் மக்கள் வாழ்விடங்கள் மீது ஷெல் தாக்குதல்களை நடத்தினர். துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. (இ-5)

### ராஜீவ் கொலைச் சம்பவம்: 2ஆவது கமிஷன் விசாரணை

புதுடில்லி, மே 14

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டது தொடர்பாக இந்திய அரசாங்கத்தினால் நியமிக்கப் பட்ட இரண்டாவது விசாரணைக் கமிஷன் தனது விசாரணைகளை அடுத்த மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கவிருக்கிறது.

ராஜீவ் காந்தியைக் கொல்ல வேண்டும் என்ற முடிவை எடுத்தது—

பின்னர் அவரைக் கொல்லத் திட்டமிட்டு அத்திட்டத்தைத் தயாரித்தது—

ஆகியவற்றுக்கு ஏதாவது ஏஜன்ஸிகள் அல்லது குழுக்கள் பொறுப்பாக இருந்தனவா என்பது குறித்தும்—

இக்கொலை தொடர்பாக சர்வதேச ரீதியில் சதி மேற்கொள்ளப்பட்டதா என்பது பற்றியும் இரண்டாவது விசாரணைக் கமிஷன் விசாரிக்கும்.

இக்கமிஷனுக்கு தனிநபர் ஆணையாளராக நீதியரசர் எம். சி. ஜெயின் நியமிக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.**

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. பயிராக்கவியல் / விவசாய உயிரியல்/விவசாய இரசாயனவியல் / விவசாயப்பொறியியல் / மிருக விஞ்ஞானப் பேராசிரியர்.
2. பயிராக்கவியல் / விவசாய உயிரியல்/விவசாய இரசபயனவியல்/விவசாயப் பொருளியல்/விவசாயப் பொறியியல் / மிருக விஞ்ஞானத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / உதவி விரிவுரையாளர் [தகுதிகாண்]
3. சித்த மருத்துவத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / உதவி விரிவுரையாளர் [தகுதிகாண்]
4. பயிராக்கவியல் / விவசாய உயிரியல்/விவசாய இரசாயனவியல் / விவசாயப் பொறியியல் / மிருக விஞ்ஞானம்/விவசாயப் பொருளியலில் தற்காலிகச் செய்முறை காட்டுநர்.

துறைத்தலைவரினாலும், பீடாதிபதியினாலும் ஓராண்டு காலத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்துள்ளாரென உறுதிப் படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் [தகுதிகாண்] ஒருவருக்கு விரிவுரையாளர் [தகுதிகாண்] எனப் பதவிப் பெயர் அளிக்கமுடியும் என்பதுடன் துணைவேந்தரால் மாதமொன்றுக்கு 4500-10 x 200 - 6500/- சம்பள அளவுத்திட்டத்திலும் வைக்கப்படுவர்.

**சம்பள அளவுத்திட்டம்.**

1) பேராசிரியர்: ரூபா 12 200-6x 300-14,000/- [மாதமொன்றுக்கு]
2. சிரேஷ்ட விரிவுரையாளர்: தரம் 11: ரூபா 8,000 - 5x250 - 9,250/- [மாதமொன்றுக்கு]
3. உதவி விரிவுரையாளர்: ரூபா 3 900/- மாதமொன்றுக்கு [நிலையானது]
4. தற்காலிக செய்முறை காட்டுநர்: 3,250/- மாதமொன்றுக்கு [நிலையானது]

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி **1992-07-24** ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவு திகதி **1992-06-22** ஆகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால்மூலம் படிவங்களையும், இதர விவரங்களையும் பெற விரும்புபவர்கள் 23x10 தசமமீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு ரூபா 2/- முத்திரை யொட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்பு, தகைமைகளையும்/அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

\- பதிவாளர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-05-08

[சி/2318]

# ★ பொதுக் கூட்டம் ★

வடபிராந்திய சிற்றூர்திச் சேவைச் சங்கம்
769, யாழ். காங்கேசன்துறை சேவை.

**இடம்:** யா/திருஞானசம்பந்தர் வித்தியாலயம், காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

**காலம்;** **16-05-1992** சனிக்கிழமை மாலை **3-00** மணி.

**குறிப்பு:** போக்குவரத்துத் துறைப் பொறுப்பாளர்கள் கலந்துகொள்வதால், அங்கத்தினர் அனைவரும் உரிய நேரத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

[20978] - நிர்வாக இயக்குனர்.

## சகல விதமான அச்சுவேலைகளையும் கவர்ச்சிகரமாக

செய்வதற்கு

நாடுங்கள்

# உதயன்

292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2242)

## 92 நிகழ்தகவு

**ஆரம்பம்: 14--05--92**
Thu. 3-00 — 5 00
Mr. கணேசன்
B. Sc. (Hons.)

## 92 ஒலியியல்

**ஆரம்பம்: 16--05--92**
Sat.& Sun. 11-00—12-00
Mr. ஜெயசீலன்
B. Sc. (Hons.)

**"A" Level Centre,**
Point-Pedro Road,
Ist Lane, Jaffna.

(சி/2308]

# சைவச் சிறார் இல்லம் சனியன்று கைதடியில் திறப்பு

யாழ்ப்பாணம், மே 14

இந்து சமயப் பேரவையின் சைவச் சிறார் இல்லத் திறப்பு விழா நாளை மறுதினம் [சனிக்கிழமை] காலை 10 மணிக்குக் கைதடியில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி இல்லத்தைத் திறந்து வைப்பார்.

இவ் வைபவத்தில் இல்லத்தின் ஸ்தாபகர் "குலபதி" திரு. ஆறுமுகம் கந்தையா, மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசாவினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவார்.

(ஒ-த-143-30)

# கொழும்பு பல்கலை மீண்டும் திங்கள் திறப்பு

கொழும்பு, மே 14

கொழும்புப் பல்கலைக் கழகம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மீண்டும் திறக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

செஞ்சோலை சிறுவர் இல்ல வளர்ச்சிக்கான
நிதி சேகரிப்பதற்காக

## செஞ்சோலை குழந்தைகளுடன் புகழ்பெற்ற கலைஞர்கள் இணைந்து வழங்கும்

# "சப்தஸ்வராவின் இசைமாலை" இன்னிசை நிகழ்ச்சி

யாழ். குடா நாடெங்கும்
**24-05-92 — 10-06-92 வரை நடத்தப்படவுள்ளது.**

**குழந்தைகளின் உணர்வினைப் பிரதிபலிக்கும் உணர்வு மிக்க இனிய புதிய பாடல்கள்**

சமூக அவலங்களால் பராமரிப்பின்றித் தவித்த குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்விற்கு ஒளியூட்ட உங்கள் பங்களிப்பைச் செலுத்துங்கள். உங்கள் பங்களிப்பு மேலும் பல குழந்தைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாகும்.

**பிரவேசம்:**
**10/-, 25/-, 50/-, 100/-,500/-, 1,000/-**

(20984)

# கேள்வி அறிவித்தல்

# நீர்ப்பாசனத் திணைக்களம்

பின்வரும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலைகள் விவரம்: | ஆகக் குறைந்த அளவு நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவுத் தொகை | நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவுத் தொகை | மீளளிக்கக் கூடிய கட்டுப் பணம் | மீளளிக்கப் படாத கட்டுப் பணம் |
|---|---|---|---|---|
| (அ) உடையார் கட்டுக் குளத்தின் அணையைப் புனரமைத்தல் (8ஆவது சங்கிலியிலிருந்து 29 ஆவது சங்கிலி வரை) | 1,500,000/- | 500,000/- | 250/- | 50/- |
| (ஆ) உடையார் கட்டுக் குளத்தின் அணையைப் புனரமைத்தல் (29 ஆவது சங்கிலியிலிருந்து 50ஆவது சங்கிலி வரை) | 2,000,000/- | 750,000/- | 250/- | 50/- |

நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்திலும் (ஐ.சி ரி.ஏடி.) நீர்ப்பாசனத் திணைக்களத்திலும் பதிவு செய்த ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

கேள்விப் படிவங்கள் கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர். இடமிருந்து 1992 - 05 - 11 ஆம் திகதியிலிருந்து 1992 - 06 - 09 ஆம் திகதி வரை வேலை நாட்களில் முற்பகல் 9-00 இல் இருந்து பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் "பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், கிளிநொச்சிப் பிராந்தியம், கிளிநொச்சி" என விலாசமிடப்பட்டு 1992 - 06 - 11 ஆம் திகதி முற்பகல் 10-00 மணிக்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென பிரதிப் பணிப்பாளரின் பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியிலோ போடப்பட வேண்டும்.

கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் வேலையின் பெயர், கேள்விப் பத்திரம் அடங்கியுள்ள தபால் உறையின் இடது பக்கத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

எந்திரி. பொ. சேனாதிராஜா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
முத்துஐயன்கட்டுப் பிரிவு.

[illegible]
02 - 05 - 1992

[சி-2321]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்ட பகுதியாகத் தெரிவு:

# கிளிநொச்சி மக்களுக்கு வரட்சி நிவாரணம்

கொழும்பு, மே 14

வரட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக 11 இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் கிளிநொச்சி மாவட்டமும் அடங்கும்.

இப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு மூன்று கோடி ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களை விநியோகம் செய்யும் திட்டத்தைக் கடந்த வாரத்திலிருந்து சமூக சேவைகள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இதற்காக கிளிநொச்சி மாவட்டத்திற்கு 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரம் வருமாறு;

திருகோணமலை — 20 லட்சம் ரூபா, அம்பாறை — 20 லட்சம் ரூபா, மொனறாகலை — 10 லட்சம் ரூபா, பதுளை — 30 லட்சம் ரூபா, அம்பாந்தோட்டை — 10 லட்சம் ரூபா, நுவரெலியா — 15 லட்சம் ரூபா, அனுராதபுரம் — 30 லட்சம் ரூபா, பொலன்னறுவ — 10 லட்சம் ரூபா, மாத்தளை — 15 லட்சம் ரூபா, புத்தளம் — 20 லட்சம் ரூபா.

5 பேர்களைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கு 315 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

[ஒ-எ]

## சிறிமா யுகம் முடிந்துவிட்டது! மகன் அனுரா சொல்கிறார்

கொழும்பு, மே 14

சிறிமாவோவைக் காட்டிவாகுப் பெற்ற யுகம் முடிவடைந்து விட்டது. ஏதாவது காரணத்தினால் அவர் கட்சித் தலைமையில் இருந்து விலகினால் நான் தலைமைத்துவத்திற்குப் போட்டியிடுவேன்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், சிறிமாவோவின் புதல்வருமான திரு. அனுரா பண்டாரநாயக்கா குருநாகலில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசும்போது இவ்வாறு கூறினார். [ஒ-த]


## மாபெரும் சைக்கிள் ஓட்ட, மரதன் ஓட்ட போட்டிகள்

அளவெட்டியைச் சேர்ந்த இறைகுமாரன், உமைகுமாரன் ஆகியோரின் பத்தாம் ஆண்டு நினைவாக நடத்தப்படும் மேற்படி போட்டிகள 27 – 05 – 1992 புதன்கிழமை காலை 6-00 மணிக்கு நடைபெற உள்ளன.

மரதன் ஓட்டம் — 10 மைல் (ஆண்)
சைக்கிள் ஓட்டம் — 50 மைல் (ஆண்)

பங்குபற்றும் போட்டியாளர்கள் அனைவரும் அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்திற்கு அருகில் உள்ள மகாஜன சபை மண்டபத்தின் முன் சமூகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

★ போட்டிகளில் தமிழீழத்திலுள்ள ஆண்கள் அனைவரும் பங்கு கொள்ள முடியும்.
★ போட்டியின் மேலதிக விதிகள் ஆரம்ப இடத்தில் தரப்படும்,
★ போட்டித் தினத்திலேயே போட்டிக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

மகாஜன சபை,
அளவெட்டி.

[4856]


## விசர் நாய்க்கடி தடுப்பு ஊசி

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு விசர் நாய்க்கடித் தடுப்பூசி (ஏ. ஆர். வீ.) வந்துள்ளது.

புதிதாக நாய் கடித்தவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## முத்திரைகள் தாராளம்

வண்ணார்பண்ணை, மே 14

குடாநாட்டில் உள்ள தபாலகங்களில் முத்திரைகள், வான் கடிதங்கள் தாராளமாக கையிருப்பில் உள்ளதாக வடமாகாண அஞ்சல் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

(ஒ-162)

## மெய்வல்லுனர் போட்டி

சுன்னாகம் கொத்தணி பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் இன்று காலை ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

(ஒ-152)


## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்: 12 — 10 — 1933

விண்ணுலகில்: 26 — 05 — 1991

அமரர்

### குழந்தைவேலு செல்வநாயகம்

[வேலணை மேற்கு]

**ஆண்டுத் திதி: 14—05—1992**

அன்பினைச் சொரிந்து ஆலமரமாய் எம்முடனே
என்றுமிணையாய் இன்புற்ற எம்தலைவா......
காலத்தின் லீலையால் காலனவன் நோயாய் - எம்
காவலனைக் கவர்ந்தே சென்றின்று ஓராண்டு
வழியறியாப் பயணமதை தனிவழியே சென்றதனால்
விழிநீரால் விடியலையே தேடுகின்றோம் நின்நினைவில்
ஓராயிரம் கனவுகளா, ஒன்றித்த நாட்களது
பாரிதனில் உங்கள் சுவடே வழிகாட்டும்-
எம்வாழ்வைத் தினம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

84/1, சந்தோசம் வீதி,
அரியாலை.

[20879]



SCIENCE ACADEMY
NALLUR.

ஆண்டு 10, 11
விஞ்ஞானம்
திரு. J. R. சூரி

ஆரம்பம்: 16-05-92
Sat. 5-00 p. m.

(சி-2415)



புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.

A/L 92
வினா-விடை

ஆரம்பம்: 14-5-1992

இ. நாகரிகம் பிரிவு I — 10 மணி
இ. நாகரிகம் பிரிவு II — 8 மணி
இ. சமயம் — 11 மணி

ஆசிரியர்: S. அருள்நங்கை

[இ/2409]


## யாழ். லொறி சாரதிகளிடம் வவுனியாவில் பணம் பறிப்பு!

### புளொட் மீது ராணுவம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 14

வவுனியா தடை முகாமில் பாதுகாப்புப் படையினருக்கு உதவும் "புளொட்" இயக்க உறுப்பினர்களில் சிலர் யாழ். சென்று திரும்பும் லொறிச் சாரதிகளிடம் பணம் பறித்து வருகின்றனர்.

இவ்வாறு இராணுவ வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

ஒவ்வொரு லொறிச் சாரதியிடம் இருந்தும் மூவாயிரம் முதல் ஐயாயிரம் ரூபா வரை அவர்கள் பெறுவதாகவும் — இதன் மூலம் நாள் ஒன்றுக்கு சுமார் ஒரு லட்சம் ரூபா வரை சேகரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படையினருக்குத் தெரியாமல் இப் பணம் பறிக்கப்படுவதாகவும் — லொறிச் சாரதிகள் புகார் எதுவும் செய்யாமல் பணத்தைச் செலுத்தி விட்டு செல்வதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ஒ-த-எ)

வட-கிழக்கு இணைந்த சுயாட்சித்தீர்வு:

## ஏழு தமிழ்க் கட்சிகளும் கொழும்பில் ஆராய்வு

கொழும்பு, மே 14

தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட உள்ள எந்த ஓர் அரசியல் தீர்வும் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு சுயாட்சி வழங்குவதை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

ஏழு தமிழ் அரசியல் கட்சிகளும் இந்த நோக்கத்தை அடைய எடுக்க வேண்டிய கூட்டு நடவடிக்கைகளை குறித்து கொழும்பில் கூடி ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு இம் மாதம் 19 ஆம் திகதி கூடும்போது தங்களது ஏகோபித்த நிலைப்பாட்டை முன்வைக்க வாய்ப்பாகவே இவ்வாறு கூடி ஆராயப்படுவதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

[ஒ-த]


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

A/L 93 பிரிவு - 3
ஆரம்பம்: 16-5-1992
காலை 8-00 மணி

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — திரு. தேவா |
| கணக்கியல் | — திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — திரு. சுப்பிரமணியம் |
| இந்து நாகரிகம், இந்துசமயம் | — திரு. காரைசுந்தரம்பிள்ளை |
| தமிழ் | — திரு. குழந்தை |
| புவியியல் | — திரு. குணராசா |
| அரசியல் | — திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — திரு. ஸ்ரீதரன் |

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளலாம்.

[சி/2412]



## தொழில் நுட்பக் கல்லூரி

இறுதிப் பரீட்சை 1989 - 1990 - 1991

டீ/118 - கணக்கியலிலான உயர் தேசிய டிப்ளோமா (H. N. D. A.) பரீட்சை

4 ஆம் வருட நேரசூசியில் மாற்றம்

மேற்படி பயிற்சி நெறிக்குரிய நேரசூசி பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

| திகதி | பாடம் (நேரம் 13-00 மணி முதல் 16-00 மணி வரை) |
|---|---|
| 18-5-1992 | 535 — கணக்காய்வு |
| 19-5-1992 | 536 — வரிவிதிப்பு |
| 20-5-1992 | 533 — தீர்மானக் கணக்கியல் - 1 |
| 21-5-1992 | 534 — தீர்மானக் கணக்கியல் - 11 |
| 25-5-1992 | 537 — கூட்டுத்தாபனச் சட்டம் (Corporation Law) |
| 26-5-1992 | 538 — பொருளியல் |

- அதிபர்.

தொழில் நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-2320)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### கிற்றார் விற்பனைக்கு

நல்ல தரத்தில் இரண்டு கிற்றார்கள் விற்பனைக்குண்டு. மாலை 4-30 — 6 30 இற்கு இடையில் தொடர்பு கொள்ளவும். 205, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
[20976]

### மணமகன் தேவை

யாழ்ப்பாண இந்து, செவ்வாய்க் குற்றமற்ற [கிரக பாவம் 3] 26 வயது பட்டதாரி மணப்பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். நட்சத்திரம்; மகம் 4 மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.
[20974]

### மணப்பெண் தேவை

யாழ்ப்பாண கத்தோலிக்க, சுவிஸில் நிரந்தரமாக வேலை செய்யும் 39 வயது மணமகனுக்குப் பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். அடுத்த மாதம் இங்கு வந்து மணமகளைக் கூட்டிச் செல்வார். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [20973]

### இலவச திருமண சேவை

41வயது,திருவாதிரை, A/L, U.K. இல் வசிப்பவருக்கு தகுந்த மணமகன் தேவை. U. K. இல் உள்ளவர் விரும்பத்தக்கது. தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி.
[4853]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் வெற்றி தருமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடனே கிடைக்கும். ஜாதகம், குறிப்பு எழுதிப் பலன் சொல்லப்படும். விவாகப் பொருத்தம், எண் சோதிடம் பார்த்துச் சொல்லப்படும். தொடர்பு: த. சிவானந்தன் பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [20945]

### G. C. E. A/L விலங்கியல்

அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் மீட்டல் வினா - விடை [Paper Class] 1992. ஆரம்பம் 16 - 5 - 92 காலை 9-00 மணி. 1993, 94 ஆம் ஆண்டு தனிப்பட்ட வகுப்புகள்; எஸ். செல்வநாயகம், B. Sc, Dip in-Ed, இணுவில் தெற்கு. [20566]

### வாடகைக்கு

தளபாடங்களுடன் கடை வாடகைக்கு உண்டு சுதன் இராமநாதன், இல. 118, கோவில் வீதி, நல்லூர்.
[20959]

### சங்கீதம்

சங்கீதம் வினா - விடை தயாரிப்பு: ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா 6முதல் 9வரை பயிலும் மாணவர்களுக்கும், சங்கீதசபை இரண்டாம் தரம் பயிலும் மாணவர்களுக்கும் பயன் தருவது நடுவத்துருத்தி நிறுவனத்தின் வெளியீடு; கிடைக்குமிடம் ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [20931]

### ஆண்டு - 7

''வரலாறும் சமூக கல்வியும்'' செயல் நூல் ஆண்டு -7 வெளிவந்துள்ளது. அரசாங்க பாட நூலுக்கமைய மீட்டல் வினா - விடைகள் செயற்பாடுகளுக்கு விடைகள், தவணைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் - விடைகள் யாவும் ஒருங்கே அமைந்தது. ஆக்கம்: நா. மயில்வாகனம். சென். ஜோன்ஸ் கல்லூரி. யாழ்ப்பாணம். விலை ரூா 30/-. புத்தகசாலைகளில் பெறலாம். [20965]

### வர்த்தகமும் - நிதியும்

வர்த்தகமும் - நிதியும் அலகு 2. உயர்தர வகுப்புகளுக்குரியது வெளிவந்துவிட்டது இருப்பு, களஞ்சியம், தொடர்பாடல், வியாபாரச் சேர்க்கை ஆகிய பகுதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன தொகுப்பு; தேவராஜன் ஜெயராமன் M. B. A. [டெல்கி] பூபாலசிங்கம் மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். விலை ரூ 40/-.
[4857]

## நிருரியூசன்
செண்ரர்
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

## O/L Day Class

வகுப்புக்கள்- செவ்வாய், வியாழன், சனி ஞாயிறு நடைபெறுகின்றன

தமிழ், சமயம் { பண்டிதர்
விஞ்ஞானம்- இரா. செல்வவடிவேல்
கணிதம்- மகேந்திரன்
சமூகக்கல்வி- வேலா
வர்த்தகம்- ராஜா
ஆங்கிலம்- தர்மலிங்கம்

- நிர்வாகி.

(சி/2308)

யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்

## விபுலானந்த அடிகள் நூற்றாண்டுவிழாவும், நூற் கண்காட்சியும்

தமிழ் அறிஞர்களுக்கும், ஆர்வலர்களுக்கும்

## ஓர் அன்பான வேண்டுகோள்

எதிர்வரும் 24, 25, 26 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண மாநகரசபையினால் நடத்தப்படவிருக்கும் விபுலானந்தர் அடிகள் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மூன்று நாட்களும் யாழ். பொது சன நூலகத்தில் இடம்பெறவிருக்கும் புத்தகக் கண்காட்சியில் பயன்படுத்துவதற்குகந்த அடிகளாரின் ஆக்கங்கள், நூல்கள் மற்றும் அவரைப் பற்றிய ஆக்கங்கள், நூல்கள் என்பன தங்கள் வசமிருப்பின் அவற்றை எம்மிடம் அன்பளிப்பாகவோ. இரவலாகவோ அல்லது சகாய விலையிலோ வழங்கி மேற்படி புத்தகக் கண்காட்சி வெற்றிபெற பூரண ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
12 - 05 - 1992.
(சி-2322]

## யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை.

## சித்திர ஆசிரியர் தற்காலிக நியமனம்

18—05—1992க்கு முன் விண்ணப்பிக்குக.

அதிபர்.
யாழ்ப்பாணக் கல்லூரி.
[சி 2317]

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 17 — 10 — 1923 | 14 — 05 — 1989 |

### சலமோன் லோறன்ஸ்

ஆண்டுகள் மூன்று மறைந்ததையா! ஆனாலும் மறையவில்லை உங்கள் அன்பு முகம். கண்ணை இமை காத்தது போல் காலமெல்லாம் எம்மைக் காத்து வந்த பாசத்தின் ஊற்றே! நேசத்தின் உறைவிடமே! பார்போற்ற எம்மை ஆளாக்கிவிட்ட எம் இதய தெய்வமே! எம் குடும்ப ஒளி விளக்கே! உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று [14-05-92] வியாழக்கிழமை காலை 6-00 மணியளவில் புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும். திருப்பலியில் பங்குபற்றும்படி உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

94, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்
[20921]

## ஓராண்டு நினைவு தினம்



அமரர்
### சின்னத்தம்பி சுப்பிரமணியம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 18—04—1902 | 14—05—1991 |

கண்ணை இமை காப்பது போல் காத்த எங்கள் ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய சரவணை கதிர் வேலாயுதனை வேண்டுகின்றோம்.

மனைவி மக்கள், மருமக்கள்,
பேரர், பேர்த்திகள்.

குறொஸ் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்,
[20977]

## கலை, வர்த்தகக் கல்லூரி
## C.C.A
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

## A/L 92 மீட்டல் வினா - விடை வகுப்புகள்
## ஆரம்பம்: 16 - 05 - 1992

| | | | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|
| பொருளியல் | — | உதயன் | 2-00 — 3-00 | 2-00 — 3-00 |
| கணக்கியல் | — | ஸ்ரீ | 3-00 — 4-30 | 3-00 — 4-30 |
| வர்த்தகம் | — | இரட்ணம் | 4-30 — 5-30 | 4-30 — 5-30 |
| அளவையியல் | — | சயந்தன் | 12-00 — 1-00 | 12-00 — 1-00 |
| இந்து நாகரிகம் | — | ஜோதிஸ்வரன் | 1-00 — 2-00 | 1 00 — 2-00 |

குறிப்பு: (1) அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
(2) 1991 முதல் 1980 வரை வினா-விடை வகுப்பு.
அச்சடித்த பாடக் குறிப்பு வழங்கப்படும்.

## A/L 1993
புதிய பிரிவு
ஆரம்பம்: 16-05-1992
காலை 8 மணி
[வழமையான ஆசிரியர் குழு]

## A/L 1994
புதிய பிரிவு II
ஆரம்பம்: 16-05-1992
காலை 8 மணி
[வழமையான ஆசிரியர் குழு]
[சி-2405]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை இந்தியா ஆசைகாட்டி அழைக்கிறது

## ஜே. ஆர். கூறுகிறார்

கொழும்பு, மே 14
அன்று அமெரிக்காவின் இராணுவ உதவிகளை இலங்கை பெற்றுவிடும் என்று அச்சமடைந்து, இலங்கை— இந்திய ஒப்பந்தத்தில் அது பற்றிய இணைப்புகளைத் தனியாகச் சேர்த்துக்கொண்ட இந்தியா இன்று கூட்டுக்கடற்படை ஒத்திகை நடத்த வருமாறு அமெரிக்காவை ஆசை காட்டி அழைக்கிறது

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா கொழும்பில் சர்வதேச லயன்ஸ் கழக மூன்றாவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனது நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு ஆபத்து ஏற்படலாம் என்று கருதி அமெரிக்காவின் உதவியை இந்தியா இன்று நாடி நிற்கின்றது என்றும் திரு. ஜெயவர்த்தனா சொன்னார்.

அதனால் தான் இந்தியா அமெரிக்காவைப்பார்த்து, 'அமெரிக்காவே வாருங்கள்— நானும் நீங்களும் இன்று நண்பர்கள்'' எனக் கூறுகிறது என்றும் முன்னாள் ஜனாதிபதி கூறினார்.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் எல்லாம் முஸ்லிம் அடிப்படைவாத நாடுகளாக மாறிவருகின்றன. இதனால் தமது நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து என்று இந்தியா கருதுகிறது என்றும் அவர் கூறினார்

உலக அரசியல் அரங்கில் இன்று நிகழ்வுகள் வேகமாக ஏற்பட்டு வருகின்றன. தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியா இன்னும் ஓர் ஆதிக்க சக்தியாகவே உள்ளது

இரண்டு வல்லரசுகள் இல்லாத புதிய உலக ஒழுங்கின் கீழ் புதிய திருப்பங்களும் நிகழ்வுகளும் வேகமாக ஏற்பட்டு வருகின்றன.

உலகின் எந்தப் பகுதியிலும் மார்க்ஸிஸ கம்யூனிஸம் தலை எடுக்கவே முடியாது என்று நான் நம்புகிறேன்.

இப்படி திரு. ஜெயவர்த்தனா மேலும் கூறினார்.

[இ-எ]

# தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம்

தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கக் கோரி பளையில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களும் தொண்டர் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தர்மக்கேணியில் ஆரம்பமாகி கண்டி வீதியால், பளை பஸ் நிலையம் ஊடாக, பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையை வந்தடைந்தது

அரசாங்க அதிபர் ஊடாக அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்க வேண்டிய மகஜர் பளை உதவி அரசாங்க அதிபர் செல்வி க. அன்னமயிலிடமும் கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளருக்கும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்குமான மகஜர்கள் பளை கொத்தணி அதிபர் திரு. ப. அரியரத்தினத்திடமும் கையளிக்கப்பட்டன.

[இ-1-44]

# 26 தங்க "டொபிகளை" கடத்த முயன்ற மூவர் கைது

கொழும்பு, மே 14
இருபத்தாறு 'தங்க டொபிகளை' இந்தியாவுக்கு கடத்திச் செல்ல முயன்றதாகக் கூறப்படும் மூன்று இலங்கையரை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கத்திணைக் களத்தினர் கைது செய்தனர்.

டொபி மேலுறைகளால் சுற்றப்பட்டு வெளிப்பார்வைக்கு உண்மையான டொபிகள் போன்று அவை காணப்பட்டனவாம்.

அத்தங்க ரொபிகளின் பெறுமதி 8 லட்சத்து 39 ஆயிரத்து 520 ரூபா என்று மதிப்பிடப்பட்டது.

பிடிபட்ட மூவருக்கும் தலா 8 லட்சத்து 39 ஆயிரத்து 520 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது அவர்கள் அபராதத்தைக் கட்டத் தவறவே, கட்டுநாயக்கா பொலீஸாரிடம் அவர்களை சுங்க அதிகாரிகள் ஒப்படைத்தனர்.


## A/L 94, 93

கலை, வர்த்தக மாணவர்க்கு!

எமது சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால்

★ மாதாந்த மீட்டல், பரீட்சைகளுடன் ★

★ புதிய பிரிவுகள் ஆரம்பம்:- 16-05-1992 காலை 6-30

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. மகேந்திரன் |
| கணக்கியல் | — திரு. அசுஸ்ரின் |
| வர்த்தகவியல் | — திரு. பசில் |
| அளவையியல் | — திரு. யுகபாலசிங்கம் |
| இந்து நாகரிகம் | — திரு. காரை. சுந்தரம்பிள்ளை |
| கிறீஸ்தவம் | — செல்வி அன்ரனற் பிலிப் |
| அரசியல் | — திரு. சியூபேடீ ராஜன் |

★ ஏனைய பிரதான பாடங்களும் உண்டு.

★ 15 வருட பிரத்தியேக கல்விச் சேவையில்,

ஆர். ஜே. கல்வி நிலையம்,

ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

[20994]


# உற்சவம்

யாழ்ப்பாணம், மே. 14
அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்து மாரியம்பாள் ஆலய வருடாந்த உற்சவ தினம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நடைபெறும். (ஓ)

# இன்று

சுழிபுரம், மே. 14
பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய கனிஷ்ட பிரிவு வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும். (ஓ-28)

* * *

யாழ்ப்பாணம், மே. 14
யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இரண்டாம் கட்ட ஆட்டங்களில் இன்று ஸ்கந்தா அணியை எதிர்த்து விநாயகர் அணி மோதும். இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெறும். (உ)

# 72 பேருக்கு நேற்று நியமனம்

யாழ்ப்பாணம், மே 14
அமைய எழுது வினைஞர்களாக 72 பேருக்கு நேற்று அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் நியமனக் கடிதங்களை வழங்கினார்.

போட்டிப் பரீட்சை மூலம் தெரிவான 304 பேரில் இருந்து உயர்புள்ளி அடிப்படையில் இவர்கள் தெரிவானார்கள்.

18 ஆம் திகதி முதல் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். செயலகத்துக்கு 12 பேரும், சுகாதார திணைக்களத்துக்கு 32 பேரும், கல்வி திணைக்களத்துக்கு 48 பேரும் நியமனம் பெறுவர்.

[இ-3]


அளவையியல்

## A/L 92

வினா - விடை
(91 — 81)

| | |
|---|---|
| பிரிவு I | பிரிவு II |
| செவ்., வியா.-சனி, | ஞாயி |
| 4—6 | 9—11 |

## A/L 93/94

பிரிவு II
சனி, ஞாயிறு 7 — 8
ஆசிரியர்:
திரு. சோதிலிங்கம்
ஆரம்பம்:
14—05—1992

★ சுபேன் ★
கல்வி நிலையம்,
[எழிலகத்திற்கு அருகாமையில்]
[20990]


## 'ஷப்றா' கிண்ண கிரிக்கெட்:

# நாளை முதல் போட்டிகள் விறுவிறுப்பாக ஆரம்பம்

யாழ்ப்பாணம். மே 14
''ஷப்றா'' கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத் தொடர் நாளை ஆரம்பமாகின்றது.

நாளையும், நாளை மறுதினமும், ஞாயிற்றுக்கிழமையும் முதற்சுற்று ஆட்டங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் கால் இறுதியாட்டங்களும் 24 ஆம் திகதி அரையிறுதி ஆட்டங்களும் நடைபெறும்.

இறுதியாட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதற்சுற்று, கால் இறுதி, அரையிறுதி ஆட்டங்கள் 30 ஓவர்களைக் கொண்டவையாகவும் இறுதியாட்டம் 40 ஓவர்களைக் கொண்டதாகவும் இருக்கும்.

இந்தச் சுற்றுப் போட்டியின் ஓர் ஆட்டம் மட்டும் கொக்குவில் இந்து மைதானத்திலும் ஏனைய ஆட்டங்கள் யாவும் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறும்.

முதற்சுற்று ஆட்டவிவரங்கள் வருமாறு:-

**நாளை**

★ காலை 8.30:- சென்றலைட்ஸ் சொக்ஸ் எதிர் ஜொலி ஸ்டார்ஸ் கோல்ட்ஸ்
பி.ப 1.00:- ஷப்றா எதிர் சென்றலைட்ஸ் புளூஸ்.

**நாளை மறுதினம்**

★ காலை 8.30:- அரியாலை வி.க எதிர் ஓல்ட் கோல்ட்ஸ்

★ காலை 8.30:- மானிப்பாய் பரிஸ் எதிர் மல்லாகம் கி. அ. ச. அணி [கொக்குவில் இந்து மைதானம்]
பி.ப 1.00:- ஸ்ரான்லி எதிர் ஜொனியன்ஸ்

**ஞாயிற்றுக்கிழமை**

★ காலை 8.30:- கிறாஸ்கொப்பர்ஸ் எதிர் யாழ் பல்கலைக்கழகம்

★ பி.ப 1.00:- ஸ்கந்தா எதிர் ஜொலி ஸ்ரார்ஸ் புளூஸ்

**19 ஆம் திகதி**

★ பி.ப 1.00:- கொக்குவில் ம.ச.ச.நி. அணி எதிர் பற்றிசியன்ஸ் அணி.

[உ]

## வவுனியா ஊடாகச் செல்ல

# பழைய நிரந்தர அனுமதி அட்டைகள் இம்மாத இறுதி வரையே செல்லுபடி

வவுனியா ஊடாகப் பிரயாணம் செய்வதற்கு கடந்த முதலாம் திகதிக்கு முன்னர் நிரந்தர அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் அவற்றை இம்மாதம் 31 ஆம் திகதி வரை மட்டுமே பயன்படுத்த முடியும்.

அந்தத் திகதிக்குப் பின்னர் — அதாவது எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம்— வவுனியா ஊடாகச் செல்ல பழைய நிரந்தர அனுமதி அட்டைகளைப் பயன்படுத்த முடியாது; புதிய நடைமுறைக்கு உட்பட்ட நிரந்தர அனுமதியை அதற்குப் பெற்று கொள்ள வேண்டும்.

போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு இவ்வாறு பொது மக்களுக்கு அறிவித்திருக்கிறது.

01 - 05 - 92 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொண்ட நிரந்தர அனுமதி அட்டைகள் யாவும் 31 - 05 - 92 ஆம் திகதி வரைக்குமே செல்லுபடியாகும் என்றும்—

அதன் பின்னர் — 01-06-92 ஆம் திகதி முதல் — புதிய நடைமுறைக்கு உட்பட்ட நிரந்தர அனுமதியைப் பெற்றே வவுனியா சோதனை நிலையத்தின் ஊடாக பிரயாணம் செய்ய முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தெற்கில் வெள்ள அபாயம்; மண் சரிவில் இருவர் பலி!

கொழும்பு, மே 14
கொழும்பு, காலி, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் கடந்த இரண்டு நாட்களாகப் பெய்து வரும் கடும் மழையினால் பல நூற்றுக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பலத்த மழையினால் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது 350க்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன. சில இடங்களில் மண்சரிவுகளும் இடம்பெற்றுள்ளன.

பத்தேகமவில் ஏற்பட்ட மண்சரிவினால் இருவர் உயிரிழந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. [ஓ-த]

# எஸ்.பியின் தகைமை அறிய விசாரணை நடத்த உத்தரவு

கொழும்பு, மே 14
கொழும்பில் பணிபுரியும் பொலீஸ் அத்தியட்சகர் ஒருவரின் கல்வித் தகைமைகள் பற்றி விசாரணை நடத்தும்படி இரகசியப் பொலீஸாருக்கு, பொலீஸ்மா அதிபர் உத்தரவிட்டிருக்கிறார்.

இவர் 1967 இல் பொலீஸ் சேவையில் சேர்ந்தபோது போலி ஜி.சீ.ஈ. சான்றிதழைச் சமர்ப்பித்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு கிடைத்த முறைப்பாட்டின்படி, அந்த பொலீஸ் அதிகாரி 1962 இல் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஒரு திறமைச் சித்தியும் இரண்டு பாடங்களில் சாதாரண சித்தியும் மட்டுமே பெற்றிருந்தார் என்று கூறப்பட்டுள்ளது. பொலீஸ் சேவையில் சேர்வதற்கு இத் தகைமைகள் போதா என்றும் பொலீஸ் வட்டாரங்கள் கூறின.

[ஓ—எ]

# வெங்கட்ராமன் சீனா விஜயம்

புதுடில்லி, மே. 14
இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் சீனாவுக்கு 6 நாள் விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை புறப்படுவார்.

இந்திய ஜனாதிபதி ஒருவர் சீனாவுக்கு விஜயம் செய்வது இதுவே முதற்தடவை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90இல் கைதான கிறிஸ்தவ மதகுரு குறித்து இதுவரை தகவல் இல்லை

யாழ்ப்பாணம், மே. 14
ஏறாவூர் பகுதியில் வைத்து 1990 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட பிதா ஷேவியர் இதுவரை விடுவிக்கப்படவில்லை. அவர் பற்றிய தகவல்கள் எதனையும் இராணுவத்தினரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் இளைஞர் ஒருவருடன் சைக்கிளில் சென்ற சமயம் எதிரில் வந்த இராணுவ அணியினர் அந்த இளைஞரைக் கைது செய்ய முயன்றதை பிதா ஷேவியர், தடுத்த போது அவரும் அந்த இளைஞருடன் சேர்த்து படையினரால் பிடித்துச் செல்லப்பட்டார். அவர்கள் இருவர் பற்றிய எதுவித தகவலும் இதுவரை தெரியவரவில்லை என்றும் —

அநேகமாக அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேதிக்கப்படுவதாகவும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# சுவிஸ் பிரஜையிடமிருந்து பாவித்த ரவைகள் மீட்பு!

பெருமளவு ஆயுதங்களை கடத்திக் கொண்டு வந்து கொழும்பில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட சுவிஸ் பிரஜை முன்னர் வசித்ததாகக் கூறப்படும் வீடு ஒன்றை கடந்த ஞாயிறு ஜாஎல பொலீஸார் சோதனையிட்டனர்.

வேவல என்ற இடத்தில் உள்ள அந்த வீட்டில் இருந்து பாவிக்கப்பட்ட .22 ரக ரவைகளைப் பொலீஸார் கைப்பற்றினர்.

பாவிக்கப்பட்ட ரவைகள் அறையினுள் பெட்டி ஒன்றில் பூட்டி வைத்திருக்கக்காணப்பட்டன. [உ-எ]

# புலிகளுடன் பேசுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தயார்

கொழும்பு, மே. 14
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எவருடனும் பேசத் தயாராக உள்ளது. விடுதலைப் புலிகளும் அதற்கு விதிவிலக்கு அல்ல.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம்.ஏச். எம் அஷ்ரப் பி.பி.ஸி.க்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இது வரை புலிகள் அமைப்பிலிருந்து எவரும் தன்னைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்க அணுகவில்லை என்றும் அவர் கூறினார். [இ-10]

## குமாரியில் அதிகளவு சீனி

'குமாரி' கப்பலில் ஆயிரத்து 150 மெற்றிக் தொன் சீனி எடுத்து வரப்பட்டுள்ளது.

அடுத்து வரவிருக்கும் கப்பலிலும் சீனியை அதிகளவில் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் இத் தகவல்களைத் தெரிவித்தார்.

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் இன்று ஆரம்பமாகும்.
[இ-3-162-5]

## போரூட் அதிகாரி யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், மே. 14
போரூட் நிறுவனத்தின் நிவாரணப் பணிகளுக்குப் பொறுப்பான அதிகாரியான திரு. லாஸ் ரிற் பேர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

போரூட் நிறுவனம் உதவிய நிதியில் இருந்து புனரமைக்கப்படும் குளங்கள் மற்றும் புனரமைப்பு வேலைகளை அவர் பார்வையிட்டார்.

## கட்டாயமாக குடியமர்த்த முயற்சி

யாழ்ப்பாணம், மே 14
அண்மையில் படுகொலைகள் இடம்பெற்ற மட்டக்களப்பு முந்துக்கல கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ள தமிழ்க் குடும்பங்களை வாழைச்சேனைப் பகுதியில் குடியமர்த்த அரச அதிகாரிகள் முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனைப் பகுதி, தமிழர்களுக்குப் பாதுகாப்பற்ற இடமாக இருப்பதால் அங்கு சென்று வாழ அவர்கள் அச்சமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [இ-5]

---

### ராஜீவ்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
பட்டிருக்கிறார்.

ஸ்ரீ பெரும்புதூரில் ராஜீவ் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு வழிவகுத்த நிகழ்வுகள் பற்றியும் இந்தக் கமிஷன் விசாரணை செய்யும்.

இக்கமிஷனுக்கு உதவுவதற்காக புதுடில்லி அரசு உயர் பாதுகாப்பு அதிகாரி ஒருவரை நியமித்துள்ளது.

இதேவேளை—

ராஜீவ் கொலை பற்றி விசாரணை நடத்திய முதலாவது கமிஷனின் தலைவர் நீதியரசர் வர்மா தனது அறிக்கையை அடுத்த மாத நடுப் பகுதியில் சமர்ப்பிக்கவிருக்கின்றார்.

ராஜீவ் காந்தியைக் கொன்ற தற்கொலைப் படைப்பெண் தனு, சம்பவம் நடந்த தினம் ஸ்ரீ பெரும்புதூரில் ராஜீவ் காந்திக்கு அருகே எப்படிச் சென்றார் என்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவே மத்திய அரசு வர்மா கமிஷனை நியமித்தது என்பது தெரிந்ததே. [உ-எ]

### கடத்தப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
தகவல் கொடுத்ததும் தெரிந்தவையே.

முஸ்லிம் ஊர்காவல் படையினரே இவர்களை கடத்திச் சென்று கொலை செய்ததாகக் கூறப்படுகிறது.

கொலை செய்யப்பட்டிருக்கலாம் என நம்பப்படும் 12 பேரில் அறுவர் மாணவிகள் என்பதும், இவர்கள் வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று வந்தவர்கள் என்பதும், இவர்களின் பெற்றோர் வாழைச்சேனை காகித ஆலை ஊழியர் என்பதும் குறிப்பிடத்தக்கவை. [ஒ-3]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்( பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14 - 5 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# நோர்வே அதிகாரி யாழ். வருகை

யாழ்ப்பாணம், மே. 14
நோர்வே தூதரக முதல் செயலாளர் திரு. ரைக்கிரு வெற்றர், நேற்றுக்காலை யாழ்ப்பாணம், வந்து சேர்ந்தார்.

நேற்று யாழ். நகரப்பகுதியில் சேதமடைந்த கட்டடங்களையும், நகரப்பகுதிகளையும் பார்வையிட்ட அவர் பலரைச் சந்தித்து உரையாடினார்.

நாளை அவர் கொழும்பு திரும்புவார். என்று எதிர் பார்க்கப்பட்டது. (இ-3)

# நாவலர் மண்டபத்தில் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், மே 14
தையல், மனையியல், கைப்பணிப் பொருட்காட்சி ஒன்று நாளை வெள்ளிக்கிழமை யாழ் நாவலர் மண்டபத்தில் [நாவலர் வீதி] நடைபெறவுள்ளது.

யாழ். செயலக கிராம அபிவிருத்திப் பகுதி ஏற்பாடு செய்துள்ள இந்தப் பொருட்காட்சி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். நுழைவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மங்கள விளக்கேற்றியும், திருமதி யோ. மாணிக்கவாசகர் நாடாவை வெட்டியும் பொருட்காட்சியை ஆரம்பித்து வைப்பர். [ஒ]

---

### இந்தியாவுடன் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
முழு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது என்றும் —

அவர்கள் இருவரையும் ஒப்படைக்கும்படி இலங்கை அரசிடம் கேட்டுக் கொள்ளப்படும் என்றும் அப்போது அவர் கூறினார்.

இதற்கிடையில்—

திரு. பிரபாகரன் பிடிபட்டால் அவரை இந்தியாவிடம் ஒப்படைப்பதில் சிரமம் ஏதும் இருக்காது என்று இலங்கை அரசு அறிவித்திருப்பதாக இந்திய வானொலி தெரிவித்தது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கொழும்பில் கூட்டம் ஒன்றில் பேசுகையில் இத்தகவலை வெளியிட்டார் என்றும் கூறப்படுகிறது

''இந்தியா கேட்டுக் கொள்வதுபோல திரு. பிரபாகரனை இந்திய அரசிடம் ஒப்படைக்க இலங்கை அரசு தயாராக இருக்கின்றது. ஆனால் அவரைப் பிடிப்பது எப்படி என்பதுதான் பிரச்சினை!''— இவ்வாறு பிரட்மன் வீரக்கோன் கூறினாராம்.

''விடுதலைப் புலிகளைத் தடை செய்வதா அல்லது இல்லையா என்பது இந்தியாவைப் பொறுத்த விடயம்',— என்றும் அவர் குறிப்பிட்டார் என்றும் கூறப்படுகிறது.
[உ-எ-த-10]

---

### கொழும்பு...

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]
மாணவர் அமைதியின்மையை காரணம் காட்டி கடந்த வாரம் கொழும்புப் பல்கலைக்கழகம் மூடப்பட்டது தெரிந்ததே.

பிரச்சனைகளைப் பேச்சுகள் மூலம் தீர்த்துக் கொள்ள முன் வந்துள்ளதாக பல்கலைக் கழக மாணவர் சங்கம் அளித்த உறுதி மொழியைத் தொடர்ந்து பல்கலைக் கழகத்தைத் திறப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. (இ-எ)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை கந்தசாமி

வட்டு - மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கந்தசாமி காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக் கிரியை 14 - 05 - 1992 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

கற்பக விநாயகர் அச்சகம்,
வட்டு - மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்
[20995]

## திரு. விநாசித்தம்பி மாணிக்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கும்பப்பிள்ளை, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான விநாசித்தம்பி மாணிக்கம் நேற்று அவரது இல்லத்தில் காலமானார். அன்னார் மாணிக்கம் இரத்தினத்தின் அன்புக் கணவரும், திருமதி தவசோதி கெங்கேஸ்வரன், தவமலர், யோகேஸ்வரன் [பெரியண்ணை], கோடீஸ்வரன் [கனடா], நகுலேந்திரன் [பிரான்ஸ்], நந்தகுமார், சசிகலா [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா கெங்கேஸ்வரனின் அன்பு மாமனாரும், கெ. சயந்தனின் அன்புப் பேரனும், வி. தம்பிராசா, திருமதி கந்தையா இராசம்மா, காலஞ்சென்றவர்களான வி. நாகையா, வி. இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற வ. கந்தையாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று 14-05-1992 முற்பகல் 11 மணியளவில் இருபாலை கந்தன்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இருபாலை கிழக்கு,
கோப்பாய்.
[20982]

தகவல்:
மா. யோகேஸ்வரன்
[மகன்]

## கந்தையா செல்லையா

கோண்டாவிலைச் சேர்ந்தவரும் மூளாய் வீதி, வட்டுக்கோட்டையில் வசித்தவருமாகிய கந்தையா செல்லையா அவர்கள் 13 - 5 - 92 அன்று காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், தனலக்சுமி, நாகராஜா [டென்மார்க்], றதி (மின்தறி, ஆலை வட்டுக்கோட்டை] ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலசூரியர் [யாழ். செயலகம்], மோகனேஸ்வரி [டென்மார்க்], சந்திரலிங்கம் [சவூதி அரேபியா] ஆகியோரின் அன்பு மாமனாரும் ரஜீந்திரன், கோகுலராஜ் சஜீதா, டிலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14 - 5 - 92 வியாழக்கிழமை பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாற்று மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்
[20996]

## ஆறுமுகம் சுப்பிரமணியம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுப்பிரமணியம் [ஓய்வுபெற்ற உடற்பயிற்சி விரிவுரையாளர். ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, பலாலி, — முன்னாள் யாழ். மாவட்ட சாரண ஆணையாளர்] அவர்கள் நேற்று மாலை சிவபதமடைந்தார்.

அன்னார் பொற்கொடியின் [இரத்தினமணி] அன்பு கணவரும், கெங்காதரன் [Retd. A.M.C. Overseer], மகேந்திரன் [டென்மார்க்], குகேந்திரன் [பிரான்ஸ்], மாலதி [லண்டன்], குமார், ரஞ்சினி (கௌரி) [Central Nursing Home], பகீரதன், சாந்தி [ஜேர்மனி], தயாளினி, அமிழ்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலாதேவ், தேவி [டென்மார்க்], விஜேந்திரன் [லண்டன்], சிவசுப்பிரமணியம் [கொழும்பு], சாந்தரூபன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நாகரெத்தினம், காலஞ்சென்ற செல்லத்துரை, பவளக்கொடி, சின்னராசா [Retd. S.W.O] ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [14-5-1992] வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

"அசோகா",
பலாலி வீதி,
திருநெல்வேலி.

தகவல்;
சு. கெங்காதரன்
[மகன்]
(02999)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org